UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension

May/June 2006

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

SP (NH) T12585/1
© UCLES 2006

UNIVERSITY of CAMBRIDGE International Examinations

[Turn over

www.theallpapers.com

BLANK PAGE



www.theallpapers.com

## Section A – Translation

**1** Translate into **English**.

ஒரு வயதான மனிதர் தெருவில் மெதுவாக நடந்து வந்து, தெருவைக் கடக்கும் இடத்தில் நின்றார். தன்னுடைய கோலில் சாய்ந்து நின்று கொண்டு தெருவின் இரண்டு பக்கமும் பார்த்தார். அந்த சமயத்தில் தெரு மிகவும் அமைதியாக இருந்தது. சில கார்கள் மட்டுமே போய்க் கொண்டிருந்தன.

அவர் ஒரு காலைத் தெருவில் வைப்பதற்கு முன்னால் கவனத்துடன் காத்திருந்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தெருக் கோடியில் திடீரென்று வேகமாக ஒரு கார் தோன்றியது (வந்தது). காரை ஓட்டுபவர் தெருவைக் கடக்குமிடத்தில் நின்று கொண்டிருந்த இந்த வயதானவரைப் பார்க்காமல் காரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டு போனார். வயதானவர் பின்னால் சில அடிகள் போய் நின்றார். பார்ப்பதற்கு பயந்தவர் போல் இருந்தார். அவர் தன் தலையை ஆட்டினார்.

எதிர்ப்பக்கத்தில் தெருவைக் கடக்க வந்த இளைஞன் எல்லாவற்றையும் பார்த்தான். இவன் தெருவைக் கடந்து வந்து வயதானவரின் கையைப் பிடித்துக் கொண்டான். மற்ற கையினால் தெருவில் வரும் கார்களை நிறுத்தி மெதுவாக வயதான மனிதரை எதிர்ப்பக்கம் கூட்டிக் கொண்டு போனான்.

[10]

**2** Translate into **Tamil**.

The young man began the day in a hurry and in a bad mood. He knew he was going to have to rush to get his assignment handed in on time today. He had worked halfway through the night to get it finished. He had gone to bed thinking it was in his notebook inside his bag, but the next morning it was not there. He spent a frantic hour looking for it but still could not find it.

"Have you checked inside your notebooks and in your college bag?" his mother asked.

"Of course I have!" he replied angrily.

"Well, I will just check them anyway," she said, disappearing out of the room.

"That won't do any good," he replied, now pulling the contents of his cupboard onto the floor. He stamped his foot in annoyance and yelled as he stepped on a stapler. His mother walked back into the room.

"I've looked absolutely everywhere," he mumbled.

"Not quite everywhere," she replied quietly, waving the assignment in her hand "This was in the side pocket of your bag."

[20]

© UCLES 2006

www.theallpapers.com

## Section B – Reading Comprehension

Read the following passage and then answer in **Tamil** the questions that follow.

### ஸ்ரீலங்காவில் இருக்கும் சிறுத்தைகள்

எங்களுடைய குழுவினர் (கூட்டத்தினர்) மிகவும் பரபரப்பாகவும் ஆர்வத்துடனும் இருந்தனர். அதிகாலையில் எழுந்த சிரமங்கள் கூட மறந்து போய்விட்டது. "யாளா" பிரதேசத்தில் ஒரு பெரிய மலையின் மேல் ஏறி வெயிலில் காத்திருப்பது தான் எங்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது. வேறு எதைப் பற்றியும் நாங்கள் நினைக்கவில்லை. பயங்கரமான ஆனால் அழகான சிறுத்தைகள் ஸ்ரீலங்காவில் உள்ள காடுகளுக்குப் பெருமை கொடுக்கிறது. யானைகளைத் தவிர மற்ற எல்லா மிருகங்களும் சிறுத்தைகளைக் கண்டு பயப்படுகின்றன. மற்ற மிருகங்களைக் கொன்று தின்பதில் சிறுத்தைகள் முதலிடம் பெறுகின்றன. தாவர உணவு வகைகளைத் தின்னும் மிருகங்கள், இனப்பெருக்கம் ஆகாமல் இருப்பதைச் சிறுத்தைகள் பார்த்துக் கொள்கின்றன.

எங்கள் குழுவின் தலைவர் டாக்டர் ரவி ஸமரஸிங்கே. இவர் மங்கல் நிறமுள்ள ஆடைகளை அணிந்து இருந்தார். மிகவும் மெதுவாகப் பேசினார். ஆனால் இவர் தோற்றம் போலியாக இருக்கலாம். இவர் கடந்த பத்து வருடங்களாக உலகத்தில் உள்ள அபாயகரமான மிருகங்களில் ஒன்றான சிறுத்தைகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறார்.

இவருக்குச் சிறுத்தைகளில் எப்படி விருப்பம் வந்தது? " காடுகளில் போய் சிறுத்தைகளைப் படம் எடுப்பதற்கு முன்னால் வரை எனக்கு பறவைகளில் விருப்பம் இருந்தது", என்று பழைய சம்பவங்களை நினைவு படுத்திக் கூறினார். இவர் சிறுத்தைகளைப் பார்த்தது பற்றி ஒரு நோட்டுப்புத்தகத்தில் குறித்து வைத்து இருந்தார். அந்த நோட்டுப்புத்தகத்தில் "ஏன் நான் சில சமயங்களில் மட்டும் சிறுத்தைகளைப் பார்க்கிறேன்; மற்ற சமயங்களில் பார்ப்பதில்லை? நான் ஒரே சிறுத்தையைப் பல தடவை பார்க்கிறேனா அல்லது அவை வேறு வேறு சிறுத்தைகளா?" என்று இவர் குறிப்பிட்டு இருந்தார். இவருடைய ஆர்வம் இந்த நோட்டுப்புத்தகத்தில் இருந்து தெளிவாகத் தெரிந்தது. இவர் வரைந்த படங்களில் இருந்து ஒவ்வொரு சிறுத்தையின் உடம்பிலும் புள்ளிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்று தெரிய வருகிறது.

உலகத்தில் உள்ள எல்லா இடங்களையும் விட இங்கு தான் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. இதில் சில நோயுள்ள சிறுத்தைகளும் இருந்தன. "உதாரணமாக ஒரு கண் இல்லாமல் ஒரு பெண் சிறுத்தை இருந்தது. அதன் உடல்நிலையும் நன்றாக (சாப்பிட்டு) இருந்தது. இவைகள் சாப்பிடுவதற்கு சுற்றுப்புறத்தில் நிறைய மிருகங்கள் இருப்பது தெரிய வருகிறது. எப்படியும் நாம் கவனமாக இருக்க வேண்டும். மனிதன் தான் இருப்பதற்கு காடுகளை அழித்து கிராமங்களை ஏற்படுத்தினால் பிரச்சனைகள் வரலாம்" என்று ரவி என்னிடம் கூறினார்.

சிறுத்தைகளை இன்றும் அதன் தோல், பற்கள், எலும்புகளுக்காக வேட்டையாடுகின்றனர். சிறுத்தைகள் 1938 ம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்பட்டாலும் திருட்டுத்தனமாக சட்டவிரோதமான வியாபாரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆசியாவில் சிறுத்தைகள் மிகவும் குறைவாகத் தான் உள்ளன.

"யாளா பிரதேசத்தில் சிறுத்தைகளைப் பார்ப்பதற்கு ஏதாவது முன்னறிவிப்பு உண்டா" என்று நான் ரவியிடம் நாள் முழுவதும் காடுகளில் சுற்றிய பிறகு கேட்டேன். "சிறுத்தைகளை அதிகாலையிலும் அந்திப்பொழுது நேரங்களிலும் பார்க்கலாம். நீங்கள் அமைதியாக மறைந்து இருக்க வேண்டும். நீங்கள் சிறுத்தையைப் பார்த்தால், அது நிற்கப் போகிறதா அல்லது ஓடப் போகிறதா என்று முதல் சில நிமிடங்களில் தீர்மானம் செய்வது முக்கியம். நீங்கள் திடீரென்று ஒரு சிறுத்தையைப் பார்த்தால், கொஞ்சம் தூரம் முன்னால் நடந்து பிறகு திரும்பி மெதுவாக நடந்து வர வேண்டும். தீடீரென்று நின்று விடுவது நல்லது இல்லை. அப்படி நின்றால் சிறுத்தை தன்னைத் தாக்க வருகிறார்கள் என்று நினைக்கும். நல்ல ஒழுங்குமுறையில் அடக்கத்துடன் இருந்தால் மிகவும் நல்லது. அதனால் பொறுமை அவசியம்" என்கிறார் ரவி.



www.theallpapers.com

Now answer the following questions in **Tamil** using your own words as much as possible.

1 ஆசிரியரும் இந்த சம்பவத்தில் பங்கு கொள்வதினால் இந்தக் குழுவின் மன உணர்ச்சி எவ்வாறு இருந்தது என்பதை எழுதவும். [2]

2 இந்தக் குழு ஏன் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியிருந்தது என்று நீ நினைக்கிறாய்? [1]

3 ஆசிரியருக்குக் காலையில் எழுந்திருப்பதில் விருப்பம் இல்லை என்று எப்படி நமக்குத் தெரிய வருகிறது? [1]

4 ஸ்ரீலங்காவில் சில மிருகங்களின் எண்ணிக்கை அதிகமாகாமல் இருக்க சிறுத்தைகள் எவ்வாறு உதவுகின்றன? [1]

5 ஆசிரியர் ஏன் ரவியின் தோற்றம் போலியாக இருக்கலாம் என்று கூறுகிறார் என்பதை உன் சொந்த வாக்கியத்தில் எழுதவும் [3]

6 டாக்டர் ரவிக்கு எப்பொழுதும் சிறுத்தைகளில் ஆர்வம் இருந்ததா? காரணம் காட்டி விடை எழுதவும். [2]

7 இந்தப் பத்தியிலிருந்து டாக்டர் ரவி என்ன காரணத்திற்காக நோட்டுப் புத்தகம் வைத்து இருந்தார் என்று நீ நினைக்கிறாய்? மூன்று காரணங்களைக் கூறவும். [3]

8 டாக்டர் ரவி எவ்வாறு ஒவ்வொரு சிறுத்தையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.? [1]

9 நோயுள்ள சிறுத்தைக்கு என்ன உடம்பு சரியில்லை என்று இங்கே கூறப்பட்டுள்ளது? [1]

10 நோயுள்ள சிறுத்தைகளும் இயற்கை சூழ்நிலையில் எவ்வாறு நலமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது? [2]

11 மனிதர்கள் எப்படி கவனமாக இருக்க வேண்டும்? [1]

12 ஸ்ரீலங்காவில் சிறுத்தைகளின் எதிர்காலம் ஏன் கஷ்டமாக இருக்கும் என்றும் அதன் காரணத்தையும் எழுதவும். [2]

13 காடுகளில் சிறுத்தைகளை எப்படிப் போய்ப் பார்ப்பது நல்லது என்று இந்தப் பத்தியில் கூறப்பட்டுள்ளது என்பதை உன் சொந்த வாக்கியத்தில் எழுதவும். [5]



www.theallpapers.com

BLANK PAGE



www.theallpapers.com

**BLANK PAGE**



www.theallpapers.com

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com